செ.வெ.எண்: 60 நாள்: 28.01.2018

# புதுக்கோட்டை மாவட்டம்
# புதுக்கோட்டை பழைய அரசு தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற முகாமில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் குழந்தைகளுக்கு பல்ஸ் போலியோ சொட்டு மருத்து வழங்கினார்.

புதுக்கோட்டை பழைய அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (28.1.2018) நடைபெற்ற பல்ஸ் போலியோ செட்டு மருத்து வழங்கும் முகாமில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் குழந்தைகளுக்கு பல்ஸ் போலியோ சொட்டு மருத்து வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது,

குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை தொடங்கி வைத்தார். போலியோ சொட்டுமருந்து வழங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிறந்தது முதல் 5 வயதிற்குட்பட்ட மொத்தம் 71 லட்சம் குழந்தைகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இன்று போலியோ சொட்டுமருந்து வழங்கப்படுகிறது. ஏதேனும் குழந்தைகள் விடுபட்டிருந்தால் கூட நாளையும் நாளை மறுநாள் வீடு வீடாக சென்று விடுபட்ட குழந்தைகளை கண்டறிந்து போலியோ சொட்டுமருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 14 ஆண்டுகளாக போலியோ பாதிப்பு இல்லாத மாநிலமாக உள்ள நிலையை தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஏற்கனவே போலியோவை ஒழித்த முதன்மை மாநிலமாக மாண்புமிகு மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் மருத்துவ சேவையை மிக சிறப்பாக கட்டமைப்பை உறுதி படுத்தும் வகையில் ஓருசில வாரங்களில் புதிதாக 450 செவிலியர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள்.

தமிழ்நாடு முழுவதும் தடுப்பு மருந்துகள் போடுவதன் மூலம் தடுக்கக்கூடிய எல்லா நோய்களுக்கும் தடுப்பு மருந்து வழங்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. தற்போது 11 வகையான நோய்களுக்கு தடுப்புமருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீசல்ஸ் மற்றும் ருபல்லா தடுப்பு மருந்து இலக்கு அடையபட்டது. ரோட்டோ வைரஸ் என்ற வயிற்று போக்கிற்கான தடுப்பு மருந்து வழங்கினோம். வரும் காலங்களில் வளர்இளம் பெண்களுக்கு கர்ப்பபை வாய் புற்றுநோய் வராமல்

தடுக்க தடுப்பு மருந்து உள்ளது. அதனை வழங்க நடவடிக்கை கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

உயர்நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி செவிலியர்கள் படிப்படியாக பணிநிரந்தரம் செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த 2011–16 ஆம் வரை தொகுப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட்ட செவிலியர்கள் அனைவரும் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். 9533 செவிலியர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு உயர்நீதிமன்றத்தின் அறிவுரையின்படி ஊதியத்தை உயர்த்த மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அவர்களும் காலிப்பணியிடங்கள் உருவாகும்போதும், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கும்போதும் படிப்படியாக பணிநிரந்தரம் செய்யப்படுவார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் அவர்கள், சார் ஆட்சியர் செல்வி கெ.எம்.சரயு.இ.ஆ.ப, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.பரணிதரன், நகராட்சி ஆணையர் (பொ) திரு.ஜீவா சுப்பிரமணியன், மத்திய தொலைதொடர்பு ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.பாஸ்கர் உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள், பெற்றோர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**